# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.65/2022** **நாள் :29.10.2022**

**பகுதி அலுவலகம்–12–க்கு (ஆலந்தூர்) உட்பட்ட**
**உதவிப் பொறியாளர் பணிமனை அலுவலகம்–156 இட மாற்றம்**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், பகுதி அலுவலகம்–12க்கு (ஆலந்தூர்) உட்பட்ட உதவிப் பொறியாளர் அலுவலகப் பணிமனை–156 தற்போது சுப்பிரமணியசுவாமி கோயில் தெரு, முகலிவாக்கம், சென்னை–116 என்ற முகவரியில் இயங்கி வருகிறது. முகலிவாக்கம் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் பணிமனை–156 அலுவலக வளாகத்திற்குள் நடைபெற இருப்பதால் இப்பணிமனை அலுவலகம், **01.11.2022 (செவ்வாய்க்கிழமை) முதல் புதிய முகவரியான முகலிவாக்கம் அரசமரம் நீரேற்று நிலையத்தில் தற்காலிகமாக செயல்படும்** என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்கள் மற்றும் குடிநீர் வரி / கட்டணம் செலுத்தவும் மேற்கண்ட புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தொடர்புகொள்ள வேண்டிய கைபேசி எண்கள்:**

1. உதவிப் பொறியாளர், பணிமனை–156 – 8144930156
2. துணை பகுதிப் பொறியாளர், பகுதி–12 – 8144930235

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்